1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நல்லாற்றின் குறுக்கே கஞ்சம்பாளையத்திலும், தொட்டிப்பாளையத்திலும் குட்டைகள் கட்டும் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டன. இந்த ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டப்படுமானால் இவ்வாற்றின் நீர்ப் பாசனத்தின் கீழ் பகுதியில் உள்ள நிலங்கள் பாதிக்கப்படும் என்பதாலும், மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதல் தராததாலும், தலைமை பாசனப் பொறியாளர் ஒப்புக்கொள்ளாததாலும், இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வாரணசிபாளையத்தில் குட்டை அமைப்பு

* 130 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி காளிபாளையம் கிராமம் வாரணசி பாளையத்தில் ஓர் குட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்? எப்போது முடிவுபெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) காளிபாளையம் கிராமம், வாரணசிபாளையத்தில் ரூபாய் 1.67 லட்சத்தில் குட்டை அமைக்கும் திட்டத்தின் மதிப்பீடு தலைமைப் பொறியாளரின் பரிசிலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்ததும் அரசின் அங்கீகாரத்துடன் வேலை ஆரம்பிக்கப்படும். வேலை ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஆறு மாத காலத்தில் முடிவடையும்.

Nehru's speeches.

*131 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have authorised the local bodies to incur expenditure for the inscription of Nehru's speeches in stones; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) ஜவஹர்லால் நேருவின் உரைகளிலிருந்தும், நூல்களி லிருந்தும் 12 மேற்கோள்களை மக்களின் பார்வைக்குக் காட்டி வைப்பதற்கு ஏற்றவையென அரசு தெரிந்தெடுத்து, கற்பாளங்கள், கான்கிரீட் பாளங்கள், உலோகப் பலகைகள் முதலியவற்றில் அந்த மேற்கோள்களைத் தக்கவாறு பொறித்து வைக்க, உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசால் அனுப்பப்பட்ட மேற்கோள்கள் பட்டியலிலிருந்து இந்த மேற் கோள்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. தத்தம் நிதியிலிருந்து முறையே ரூ. 100, ரூ. 500-க்கு மேற்படாத செலவை மேற்கொள்ள ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.